பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

*27 02 2026 FRIDAY 6 30 PM*

<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை ஒரேகட்டமாக நடத்த வேண்டும் என்று அனைத்து அரசியல் கட்சிகளும் கோரியுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு Gyanesh Kumar கூறியுள்ளார்.

2) மகளிருக்கான அரசியல் அதிகாரத்தையும், உரிமைகளையும் திமுக அரசுதான் உறுதி செய்துள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

3) திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த ஆறு நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) சிங்கப்பூர் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Priyanshu Rajawat மற்றும் Anupama Upadhyaya காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை ஒரே கட்டமாக நடத்த வேண்டும் என்று அனைத்து அரசியல் கட்சிகளும் கோரிக்கை விடுத்துள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு Gyanesh Kumar கூறியுள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து கடந்த இரண்டு நாட்களாக அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் உயரதிகாரிகளுடன் சென்னையில் ஆலோசனை நடத்திய பின்னர் இன்று செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

அரசியல் கட்சிகளின் இந்த கோரிக்கை குறித்து தேர்தல் ஆணையம் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

ஊடகவியலாளர்கள் தபால் வாக்கு செலுத்த அனுமதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்தும் பரிசீலிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் மிகப்பெரிய அளவில் வெற்றிபெற்றிருப்பதாகவும், இதற்காக அப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் பாராட்டு தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதாக வாக்களிப்பதற்கான வசதிகள் வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டப்பேரவைத் தேர்தல் நேர்மையாக நடைபெறுவதை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு Gyanesh Kumar தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மகளிருக்கான அரசியல் அதிகாரத்தையும், உரிமைகளையும் திமுக அரசுதான் உறுதி செய்துள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மகளிர் உரிமைக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பட்டியலிட்டுள்ளது.

அரசுப் பணிகளில் பெண்களுக்கன இடஒதுக்கீடு 40 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது, உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்தியது உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

>>>>>><<<<<<

திமுக-வை சேர்ந்த நிர்வாகி ஒருவர் கிருஷ்ணகிரியில் பெண் குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்துள்ள சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் அக்கட்சியினர் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவது தொடர்கதையாகி உள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

திமுகவின் நிர்வாகத் தோல்வியே இந்த கொடூர சம்பவம் நடைபெற்றதற்கு காரணம் என்று அஇஅதிமுகவும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதையே, இந்தச் சம்பவம் உணர்த்துவதாக கூறியுள்ளது.

இதனை மறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொண்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், இதனை மக்கள் மறக்கமாட்டார்கள் என்றும் அஇஅதிமுக அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அ ம மு க பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரனும் இந்த சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், பச்சிளம் குழந்தைகள் தொடங்கி, வயதான முதியவர்கள் வரை யாருக்கும் பாதுகாப்பற்ற சூழலை திமுக அரசு ஏற்படுத்தியிருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் திமுக நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதே இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வதற்கு காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரி சம்பவத்தில் தொடர்புடைய திமுக நிர்வாகிக்கு அதிகபட்ச தண்டனை கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் திரு டி டி வி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் நவீன நகரங்கள் திட்டத்தின்கீழ், மத்திய அரசு பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருவதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் கைத்தறி தொழில்நுட்ப கழக கல்லூரியின் புதிய வளாகத்தை திறந்துவைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – சி பி ராதாகிருஷ்ணன் - 44 Sec.)*

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங், தமிழின் பெருமையை பிரதமர் திரு நரேந்திர மோடி உலகம் முழுவதும் கொண்டு செல்வதாக கூறினார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்கு பிரதமர் கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு மேற்கொண்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் காரணமாக ஜவுளித்துறையை சேர்ந்தவர்கள் பயனடைவார்கள் என்றும் திரு கிரிராஜ் சிங் கூறினார்.

>>>>>><<<<<<

மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை சார்பில், மாவட்டங்களுக்கு இடையேயான இளையோர் பரிமாற்ற நிகழ்ச்சி நாமக்கல்லில் கடந்த ஐந்து நாட்களாக நடைபெற்றது.

பெரம்பலூர் – நாமக்கல் மாவட்டங்களுக்கு இடையே இந்த இளையோர் பரிமாற்ற நிகழச்சி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

போதைப்பொருளின் தீமை, அரசியல் சாசனம் குறித்த விழிப்புணர்வு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த அமர்வுகள் நடைபெற்றதாக மாவட்ட இளையோர் அலுவலர் திருமதி கீர்த்தனா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த ஆறு நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தென் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<<

## *மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் மாவட்டத்தில் மத்திய அரசு திட்டத்தின்கீழ், 11 கோடி ரூபாய் மதிப்பிலான குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

>>>>>><<<<<<<

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து ஆட்சியர் திரு இளம்பகவத் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<<

நாமக்கல் மாவட்டத்தில் 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கு நியாயவிலைக்கடைகள் மூலமாக பொருட்கள் வரும் 2 மற்றும் 3-ஆம் தேதிகளில் விநியோகம் செய்யப்பட உள்ளதாக ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<<

நீலகிரி மாவட்டத்துக்கு உட்பட்ட உல்லாடா கிராமத்தில் சுற்றுலாத் துறை சார்பில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

>>>>>><<<<<<<

போதைப்பொருள் கடத்த முயன்ற நான்கு பேரை திருத்தணி ரயில் நிலையத்தில் காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<<

## *விளையாட்டுச் செய்திகள்*

சிங்கப்பூர் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Priyanshu Rajawat மற்றும் Anupama Upadhyaya காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் Priyanshu Rajawat, 21-13, 21-16 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Cheam June Wei-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் Anupama Upadhyaya, 21-18, 21-14 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Shan Zi-ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Saneeth Dayanand-ம், கலப்பு இரட்டையர் பிரிவில் Shruti Mishra – Ishaan Bhatnagar இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<<

*Prague* சர்வதேச செஸ் போட்டியின் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம், அமெரிக்காவின் *Hans Moke Niemann*-ஐ வென்றார்.

>>>>>><<<<<<